# ஸ்ரீமுஷ்ணம் முதல் நிலை பேரூராட்சி

## கடலூர் மாவட்டம்

**ந.க.எண். அ1/341 /2009** **நாள் : 20.08.2010**

## ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

கடலூர் மாவட்டம் ஸ்ரீமுஷ்ணம் பேரூராட்சியில் 2010 – 11 ம் ஆண்டு பகுதி II திட்டத்தில் கீழ்கண்ட பணிக்கு ஸ்ரீமுஷ்ணம் பேரூராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களிடமிருந்து 15.09.10 –ம் தேதி செவ்வாய் கிழமை பிற்பகல் 3.00 மணி வரை Digital Signature Card – ஐ பயன்படுத்தி E _ Tendering முறையில் மட்டுமே ஒப்பந்தப்புள்ளி வரவேற்கப்படுகிறது. அதே தேதியில் மாலை 3.30 மணிக்கு வருகை தந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் திறக்கப்படும். ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் 14.09.10 –ம் தேதி திங்கள் கிழமை மாலை 2.00 மணி வரை இணையதள http://townpanchayats.tn.gov.in/tender என்ற இணையதளத்திலிருந்து ஒப்பந்தப்புள்ளி படிவம் பெற விரும்புவோர் அதற்கான தொகையினை பேரூராட்சி அலுவலகத்தில் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம் மற்ற விபரங்களை அலுவலக வேலை நாட்களில் நேரில் கேட்டு தெரிந்து கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் தினம் எதிர்பாராத விதமாக அலுவலகம் விடுமுறை அறிவிக்கப்பட்டிருப்பின் அடுத்த வேலை நாளில் ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் ஒப்பந்தப்புள்ளியை செயல் அலுவலர் அவர்களுக்கு நிர்வாக காரணங்களின் நிமித்தம் ஒத்தி வைக்கவோ அல்லது ரத்து செய்யவோ முழு அதிகாரம் உண்டு.

### அட்டவணை

| வ. எ | வேலையின் பெயர் | மதிப்பீடு (லட்சத்தில்) | முன்வைப்புத் தொகை | ஒப்பந்தப்புள்ளி நமூனா விலை + விற்பனை வரி | ஒப்பந்ததாரரின் தகுதி ( புதிய வகுப்பில்) |
|---|---|---|---|---|---|
| 1 | **ஸ்ரீமுஷ்ணம் பேரூராட்சி பேருந்து நிலையத்தில் உட்புறம் சிமெண்ட் கான்கிரிட் ஓடுதளம் அமைத்தல்** | ரூ. 37.50 | ரூ.37500 | ரூ.9360 | வகுப்பு II அதற்கு மேல் |

2. மேற்படி ஒப்பந்தப்புள்ளி போடுவதற்கான ஒப்பந்தப்புள்ளி படிவத்தை 14.09.10 –ம் தேதி திங்கள் கிழமை பிற்பகல் 2.00 மணிக்குள் பேரூராட்சி அலுவலகத்தில் ஷெட்யூல் படிவக் கட்டணம் (விற்பனை வரி உட்பட) செலுத்தி படிவம் பெற்றுக்கொள்ள வேண்டும்.

3. ஒப்பந்தப்புள்ளிகள் ஸ்ரீமுஷ்ணம் பேரூராட்சி செயல் அலுவலரால், பேரூராட்சி அலுவலத்தில்15.09.10 -ம் நாள் செவ்வாய் பிற்பகல் 3.30 மணிக்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

4. ஒப்பந்தப்புள்ளிகள் மூடி முத்திரையிடப்பட்ட உறையின் மேல் எந்த வேலை என்ற விபரத்தை தெளிவாகவும் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

5. ஒவ்வொரு ஒப்பந்ததாரரும் அட்டவணையில் குறிப்பிட்ட வேலைக்கு எதிரே குறிக்கப்பட்டுள்ள தொகையை டேவணித் தொகையாக பேரூராட்சி அலுவலத்தில் செலுத்தி இரசீதை ஒப்பந்தப்புள்ளியுடன் இணைத்து அனுப்ப வேண்டும். ஒப்பந்ததாரர்களுடைய டேவணித் தொகை வேலைகளுக்கான பிணை வைப்புத் தொகையாக வைத்துக் கொள்ளப்படும். இத்தொகைக்கு பேரூராட்சியில் வட்டி எதுவும் கொடுக்கப்படமாட்டாது.

6. மதிப்பீட்டுத் தொகைக்கு விலைக்கு கூடுதலாக வேலையை செய்வதாக குறிப்பிடும் ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. மதிப்பீடு விலைக்கு குறைவாக வேலையை செய்வதாக ஒப்புக்கொள்கிறவர்கள் 10% வரை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். 10% மேற்கொண்டு குறைவாக கோரும் பட்சம் கூடுதல் பிணை வைப்புத் தொகையாக 10% செலுத்தினால் தான் அவர்களுடைய ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். இதற்கு பேரூராட்சியில் வட்டி ஏதும் வழங்கப்பட மாட்டாது.

(த.பி.பா)

8. ஒரு வேலைக்கு ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் வந்தால் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

9. டேவணித் தொகை செலுத்தப்படாத ஒப்பந்தப்புள்ளிகளும், உரிய படிவத்தில் போடாத ஒப்பந்தப்புள்ளிகளும், குறித்த நேரத்திற்கு பிறகு பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளும் நிராகரிக்கப்படும்.

10. அரசு ஒப்பந்தப்புள்ளி விதிகளுக்குட்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் முடிவு செய்யப்படும் குறைந்த விகித ஒப்பந்தப்புள்ளியைத் தான் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று பேரூராட்சியை கட்டுப்படுத்த இயலாது. காரணங்கள் கூறாமல் ஒரு ஒப்பந்தப்புள்ளி அல்லது பெறப்பட்ட அனைத்து ஒப்பந்தப்புள்ளிகளையும் நிராகரிக்கும் அதிகாரம் பேரூராட்சிக்கு உண்டு.

11. ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கான அறிவிப்பு கிடைத்த தேதியில் இருந்து 7 நாட்களுக்குள் ஒப்பந்தகாரர் வேலைகளை முறையாக முடித்து தருவதாக ரூ.20/-க்கான முத்திரை தாளில் ஒப்பந்தப்பத்திரம் எழுதிக் கொடுக்க வேண்டும்.

12. ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தகாரர்கள் செலுத்திய டேவணித்தொகை வேலைக்கான பட்டியல் மற்றும் கணக்குகளின் தணிக்கை முடிந்தவுடன் திருப்பி அளிக்கப்படும். தணிக்கையில் ஆட்சேபிக்கப்பட்டுள்ள தொகையினை ஒப்பந்தகாரர் பேரூராட்சிக்கு செலுத்த வேண்டும்.

13. ஒப்பந்தகாரர் மனுவில் வேலைகள் மற்றும் சதவீதத்தினை தெளிவாக எழுதியிருக்க வேண்டும். அடித்தல், திருத்தல் இருக்கக் கூடாது. அவ்வாறிருப்பின் அடிக்கப்பட்ட இடங்களில் ஒப்பந்தகாரர் கையொப்பம் இட்டிருக்க வேண்டும். ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள இலக்கங்கள் எண்ணாலும், எழுத்தாலும் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

14. ஒப்பந்தகாரர் ஒப்புக்கொள்ளப்பட்ட வேலைக்கு சப்ளை செய்யப்படும் பொருட்கள் தரமானதாக இருக்க வேண்டும். தரமானதாக இல்லை என்று நிராகரிக்கப்பட்டால் அவ்வாறு நிராகரிக்கப்பட்ட பொருட்களை ஒப்பந்தகாரர் தனது சொந்த பொறுப்பில் அகற்றிக் கொள்ள வேண்டும்.

15. செய்து முடிக்கப்பட்ட வேலைகள் வேலை முடிவுற்று 6 மாத காலத்திற்குள் அதில் ஏதேனும் பழுதுகள் ஏற்பட்டால் அதனை ஒப்பந்தகாரர் தனது சொந்தப்பொறுப்பில் சரி செய்து கொடுக்க வேண்டும். தவறினால் ஒப்பந்தகாரர் செலுத்தியுள்ள பிணை வைப்புத் தொகையிலிருந்து பேரூராட்சியால் பழுது பார்க்கப்படும்.

16. ஒப்பந்தப்பத்திரம் எழுதி முடித்த தேதியிலிருந்து மூன்று தினங்களுக்குள் வேலையை துவக்கி குறிப்பிட்ட கால அளவிற்குள் வேலையை முடிக்க வேண்டும்.

17. செய்து முடிக்கப்பட்ட வேலைகளுக்கு வருமானவரி, விற்பனைவரி பிடித்தம் கண்டிப்பாக செய்யப்படும்.

18. மதிப்பீட்டு தொகையில் 0.03% கட்டிட தொழிலாளர் நலநிதிக்காக வங்கி கேட்பு வரைவோலையினை பேரூராட்சியில் வழங்கிய பிறகே பணிக்கான ஆணை வழங்கப்படும்.

19. ஏற்கனவே பேரூராட்சியில் ஒப்பந்த அடிப்படையில் வேலைகள் எடுத்து குறிப்பிட்ட காலத்தில் பணிமுடிக்காத ஒப்பந்தகாரர்களுக்கு வேலைக்கான ஷெட்யூல் வழங்கப்படமாட்டாது.

20. ஒப்பந்ததாரர்கள் நிலுவையில் உள்ள மற்றும் முடிவு பெறாத பணிகள் குறித்து சான்று தரவேண்டும்.

மேலும் விபரங்களுக்கு: http://townpanchayats.tn.gov.in/tender

செயல் அலுவலர்
பேரூராட்சி அலுவலகம்,
ஸ்ரீமுஷ்ணம்

**பெறுதல்**

பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்கள், ஸ்ரீமுஷ்ணம் முதல் நிலை பேரூராட்சி.

**நகல்:**

1. மாவட்ட ஆட்சித் தலைவர், கடலூர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
2. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், கடலூர் மண்டலம், கடலூர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
3. உதவி செயற்பொறியாளர், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், கடலூர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
4. இளநிலை பொறியாளர், வடலூர் பேரூராட்சி அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
5. செயல் அலுவலர், பேரூராட்சி அலுவலகம், அண்ணாமலை நகர், பரங்கிப்பேட்டை, கிள்ளை, அவர்களுக்கு விளம்பர செய்ய தகவலுக்காக
6. கிராம நிர்வாக அலுவலர், ஸ்ரீமுஷ்ணம் விளம்பரம் செய்ய தகவலுக்காக.
7. அலுவலக விளம்பர பலகைக்கு.